## இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் - 2018

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் (எஸ்ஈசீ) ("கூட்டுத்தாபனம்") 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டின் போதான கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

இந்நிதிக்கூற்றுக்களினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பு முகாமைத்துவத்திற்குக் காணப்படுகின்ற போதிலும், 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2019 செப்தெம்பர் வரையிலும் 2017 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பான கருத்துரைகள்

#### 2.2.1 கூட்டுத்தாபனத்தின் காசுப்பாய்ச்சல்

மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பிரிவின் காசுப்பாய்ச்சல் நிலைமை பின்வருமாறுள்ளது.

(அ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் சேவைப்பிரிவு மற்றும் நிர்மாணப் பிரிவானது முறையே ரூபா 161,516,310 மற்றும் ரூபா 5,956,669 எதிர்மறை காசுப்பாய்ச்சலை காட்டியிருந்த அதேநேரம் நிர்மாணப் பிரிவு, பொறியியல் மற்றும் இலத்திரனியல் பிரிவு, ஆலோசனைப் பிரிவு, மற்றும் விசேட செயற்பாட்டு பிரிவு முறையே ரூபா 94,096,400, ரூபா 10,172,204, ரூபா 5,956,669, ரூபா 20,426,983 மற்றும் ரூபா 7,397,000 சாதகமான காசுப்பாய்ச்சலை காட்டியது. அதன் விளைவால் 2018 இன் இறுதியிலுள்ளவாறு கூட்டுத்தாபனத்தில் ரூபா 35,380,391 எதிர்மறை காசுப்பாய்ச்சல் மீதியை காட்டியது.

(ஆ) கூட்டுத்தாபனத்தினை நிதிக்காசு வெளிப்பாய்ச்சலானது மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரைக்கும் 5 சதவீதத்திலிருந்து 9.2 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் சனவரியிலிருந்து திசெம்பர் வரைக்கும் கூட்டுத்தாபனத்தின் மொத்த காசுப்பாய்ச்சலானது 1.9 சதவீதத்திலிருந்து 9 சதவீதத்திற்கு வங்கி மேலதிகப் பற்று வட்டிக் கிரயம் அதிகரித்தது.

(ஈ) கூட்டுத்தாபனமானது பல தடவைகள் வங்கிக்கடன்களைப் பெற்றிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலுள்ளவாறு நிலுவை மீதி ரூபா 1,720 மில்லியனாகவிருந்தது. எனினும், தேறிய காசுப்பாய்ச்சலின் எதிர்மறை மீதியானது 2018 இன் இறுதியிலுள்ளவாறு ரூபா 15,006,065 ஆக காட்டியது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிச் சட்டம் | 2006 சனவரியிலிருந்து 2015 யூலை வரை ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவு படிகள் மீது தொடர்புடைய நிதிகளுக்கு முறையே ரூபா 307.82 மில்லியன் மற்றும் ரூபா 41.97 மில்லியன் பங்களிப்புக்கள் அனுப்பப்படாமை காரணமாக, கூட்டுத்தாபனத்தினால் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு முறையே ரூபா 153.91 மில்லியன் மற்றும் ரூபா 20.98 மில்லியன் மிகைக்கட்டணங்கள் செலுத்தப்படவேண்டியுள்ளது. |
| (ஆ) கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் விநியோகிக்கப்பட்ட 1979 திசெம்பர் 20 இன் 121/1979 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2(இ) பிரிவு | கட்டளைகளுடன் காசோலைகளில் முற்பணங்கள் வழங்கப்படுகையில், 30 நாட்கள் காலப்பகுதியினுள் அவ்வாறான முற்பணங்கள் தீர்ப்பனவுசெய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 வரையான காலப்பகுதிக்காக கொடுக்கப்பட்ட ரூபா 85,220,662 கூட்டுத்தொகையான அத்தகைய முற்பணங்கள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தில் (எஸ்ஈசீயில்) தீர்க்கப்படாது இருந்தது. மேலும், ரூபா 6,445,194 கூட்டுத்தொகையான கட்டளை முற்பணங்களுடனான காசோலை 2016 ஆம் ஆண்டிலிருந்து (என்ஈஎம்ஓ) இல் தீர்க்கப்படாதிருந்தது. |
| (இ) கூட்டுத்தாபனத்தின் தலைவரால் வழங்கப்பட்ட 1979 திசெம்பர் 20 இன் 122/1979 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவு | சேவை அல்லது பொருட்களுக்காக காசு முற்பணங்கள் வழங்கப்பட்டவுடன் அத்தகைய முற்பணங்கள் 14 நாட்கள் காலப்பகுதிக்குள் தீர்க்கப்பட வேண்டும். எனினும், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 1,012,000 மற்றும் ரூபா 1,257,890 தொகையான காசு முற்பணம் 2019 ஆகஸ்ட் வரை இறுதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்தது. மேலும், 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 2,216,480, ரூபா 606,790 மற்றும் ரூபா 6,332,538 தொகையான காசு முற்பணங்கள் தேசிய உபகரண மற்றும் பொறியியல் அமைப்பு இல் தீர்க்கப்படாதிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2006 இன் பெறுகை வழிகாட்டிகளின் 5.4.8(அ) இன் வழிகாட்டி | ரூபா 55,338,226 பெறுமதியான ஏழு நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பில் நிர்மாண வேலைகளை தொடங்குவதற்கு முன்னர் செயலாற்றல் முறி பெறப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2006 இன் பெறுகை வழிகாட்டிகளின் 5.4.8(ஆ) இன் வழிகாட்டி | செயலாற்றல் முறியின் செல்லுபடியாகும் காலப்பகுதி காலாவதியடைந்திருந்த போதிலும், ரூபா 39,165,796 பெறுமதியான நான்கு தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நிர்மாண ஒப்பந்தம் தொடர்பான காலப்பகுதியை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கங்களாவன: (i) கட்டிடங்கள், சிவில் பொறியியல் மற்றும் ஏனைய பொறியியல் செயற்திட்டங்களின் புலனாய்வு, திட்டமிடல், வடிவமைப்பு மற்றும் நிர்மாணம். (ii) ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளின் ஏற்பாடு. (iii) ஆதன அபிவிருத்தி வேலைகளினை மேற்கொள்ளல். (iv) தயாராகவுள்ள கான்கீரீட் கலவை, வலுப்படுத்தப்பட்ட கான்கீரீட் மற்றும் முற்-அழுத்த கான்கிரீட் உற்பத்திகளின் தயாரிப்பு மற்றும் விற்பனை. (v) பொறியியல் செயற்திட்டங்கள்/ பொறுப்பேற்கப்பட்டவற்றிக்குத் தேவையான நிர்மாண மூலப்பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி, விற்பனை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி. (vi) பொறியில் மற்றும் தொழில்நுட்ப நபர்களுக்கான பயிற்சியளித்தல். (vii) மேற்குறித்த நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்ட நிர்மாண மூலப்பொருட்கள், முறைமைகள் மற்றும் நுட்பங்களுக்குள் ஆய்வுகளினை மேற்கொள்ளுதல்.
மேற்குறித்த நோக்கங்களினை அடைந்து கொள்ளும் பொருட்டு 2017 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்ட பிரதான செயற்பாடுகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) நிர்மாணப் பிரிவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 472.37 மில்லியன் பெறுமதியான 05 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் உண்மையான செயன்முறை 45 சதவீதத்திலிருந்து 85 சதவீத வீச்சிலிருந்தது.

(ii) ரூபா 8,650.7 மில்லியன் பெறுமதியான நான்கு செயற்திட்டங்கள் அத்தகைய செயற்திட்டத்தின் இலக்கிடப்பட்ட செயன்முன்னேற்றத்தின் 50 சதவீதத்தை அடைந்திருக்கவில்லை.

**(ஆ) நிர்மாணக் கூறுப்பிரிவு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மிறீகாஸ்ட் தளம் - இரத்மலானை (தள இலக்கம் 343)

பாதிடப்பட்ட உற்பத்தியுடன் ஒப்பிடும் போது உற்பத்தியானது ரூபா 20.8 மில்லியனால் அல்லது 21 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மேலும், பாதிடப்பட்ட விற்பனைகளுடன் ஒப்பிடும் போது ரூபா 19 மில்லியனால் அல்லது 20 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ii) டன் கொட்டுவ தளம் (தள இலக்கம் 1099)

மேற்கூறப்பட்ட தளத்தின் உள்ளபடியான உற்பத்தி பாதிடப்பட்ட உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 71 சதவீதத்தால் குறைவடைந்த அதேநேரம் பாதிடப்பட்ட விற்பனையுடன் ஒப்பிடும் போது 52 சதவீதத்தால் குறைவடைந்தது.

(iii) வலிகண்ட பிறிகாஸ்ட் தளம் (தள இலக்கம் 1738)

பாதிடப்பட்ட உற்பத்தியுடன் ஒப்பிடும் போது உள்ளபடியான உற்பத்தி ரூபா 13.8 மில்லியன் அல்லது 8 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(iv) தெமட்டகொட கொங்கிறீட் வழங்குனர் தளம் (1510)

பாதிடப்பட்ட உற்பத்தியில் 21 சதவீதம் தெமட்டஹொட கொங்கிறீட் வழங்குனர் தளத்தினால் அடையப்பட்டிருக்கவில்லை.

(v) 2292 ஆம் இலக்க செயற்திட்டத்துடன் தொடர்புடைய பாதிடப்பட்ட செயன்முன்னேற்றத்துடன் ஒப்பிடும் போது செயற்திட்டத்தின் உள்ளபடியான செயன்முன்னேற்றம் 46 சதவீதமாகவிருந்தது.

**(இ) இயந்திரவியல் மற்றும் இலத்திரனியல் பிரிவு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாத்தளையிலுள்ள டொலமைற் செயற்திட்டம் எஸ்ஈசீ இன் கீழ் செயற்படுத்தப்பட்டது. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது உற்பத்தியின் அளவு பின்னடைவிலிருந்தது. மீளாய்வாண்டின் போது இதன் செயற்பாட்டு நட்டம் ரூபா 10.5 மில்லியனாகவிரந்தது. மேலும், கூட்டுத்தாபனமானது காணி, மீளமைப்பு குழுவிற்கு 1992 இலிருந்து 2017 காலப்பகுதிக்காக ரூபா 7,227,099 குத்தகை வாடகை செலுத்த வேண்டியிருந்தது. எனினும், 2018 இன் இறுதியிலுள்ளவாறு கூட்டுத்தாபனத்தால் 1.5 மில்லியன் மாத்திரமே செலுத்தப்பட்டது. இதன் மேலாக அகழ்வதற்கான அனுமதியினை புவிச்சரிதவியல் அளவைச் சுரங்க பணியகத்திடமிருந்து புதுப்பித்திருக்கவில்லை. அதன் விளைவால், தளத்தின் உற்பத்தியானது நிறுத்தப்பட்டிருந்தது.

(ii) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், பயிற்சிப் பட்டறைகளின் உண்மையான செயன்முன்னேற்றதமானது வேலைகளின்மையால் பாதிடப்பட்ட செயன்முன்னேறத்துடன் ஒப்பிடும் போது 25 சதவீதத்திலிருந்து 76 சதவீத வீச்சிலிருந்தது.

**(ஈ) மருதானை பயணிகள் பாலம்**

(i) 1992 இல் 100 விற்பனை இடங்களை உள்ளடக்கி மருதானை பயணிகள் பாலத்தை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் நிர்மாணித்திருந்தது. விற்பனை இடங்களானது மாதமொன்றிற்கு ரூபா 450 தொடக்கம் ரூபா 650 வரையான வாடகை வீச்சுடன் தனியார் தரப்பினருக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. எனினும், இந்த விற்பனை இடங்களின் மாத வாடகையானது 1992 இலிருந்து 2018 வரையான 26 மாதங்களிற்குள் அதிகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பாலத்திலுள்ள சில இடங்கள் பாதிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் அத்தகைய சேதங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் பயணிகளிற்கு இது இடராகவிருந்தது.

**3.1.1 தேசிய உபகரணங்கள் மற்றும் இயந்திரவியல் நிறுவகத்தின் செயற்பாடு (என்ஈஎம்ஓ)**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வில் வேண்டப்பட்ட பெறுமதி சேர் வரி (வற்) தேசத்தை கட்டியெழுப்பு வரி (என்பீரி), பொருளாதார சேவை கட்டங்கள் (ஈஎஸ்பீ) தொடர்பிலான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால் அத்தகைய வரிகளின் உண்மையான செலுத்த வேண்டிய மீதிகளை கணக்காய்வில் திருப்திகரமாக தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு தீர்ப்பனவு செய்யப்படவேண்டிய பெறுமதி சேர் வரி (வற்) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) முறையே ரூபா 123.84 மில்லியன் மற்றும் ரூபா 7.8 மில்லியன் தொகை தீர்ப்பனவுசெய்யப்படாது தொடர்ந்தும் காணப்படுகின்றது.

(இ) தேசிய வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டிய ரூபா 235.8 மில்லியன் தொகையொன்று 2002 இலிருந்து 2011 வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) என்ஈஎம்ஓ இற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 344 ஆகக் காணப்பட்ட போதிலும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான பதவியணியினர் 785 என குறிப்பிடப்பட்டது. இருப்பினும், 441 மிகை ஊழியர்களுக்களுக்கான அங்கீகாரம் நிறுவகத்தினால் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், என்ஈஎம்ஓ ஆனது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியில்லாமல் 33 புதிய பதவிகளை உருவாக்கியிருந்ததுடன் 62 உத்தியோகத்தர்கள் 33 அங்கீகரிக்கப்படாத பதவிகளிற்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், சிட்டைகளினை இறுதியாக்கும் போது வீதி வேலையின் உள்ளீட்டினை அளவிடப்பட்ட அளவுகளின் அடிப்படையின் பிரயோகத்திலுள்ள வேறுபாட்டால் காலி மாவட்டத்திலுள்ள மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் 30 ஒப்பந்தகாரர்களிடமிருந்து பெறவேண்டிய மீதியாக ரூபா 61,851,213 அவதானிக்கப்பட்டது. கணக்காய்வு திகதி வரையிலும் அறவீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஏனைய அரச நிறுவகங்களுக்கு விடுவிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சிற்கும் (மாகாண அமைச்சு, கட்டிட திணைக்களம், அரச தொழிற்சாலை மற்றும்) நகர மீள்குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபைக்கும் கூட்டுத்தாபனத்தின் முப்பத்தியொரு(31) உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். மேலும், மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், இத்தகைய உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் உரிய நிறுவகங்களுக்கு மீளளிக்கப்பட வேண்டும். எனினும், வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட 11 ஊழியர்கள், கட்டிட திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்ட 06 ஊழியர்கள், அரச தொழிற்சாலைக்கு விடுவிக்கப்பட்ட 04 ஊழியர்கள் மற்றும் நகர மீள்குடியேற்ற அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்ட 05 ஊழியர்கள் போன்றோரின் சம்பளங்கள் 2019 செப்தெம்பர் 30 வரையிலும் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 விளைவற்ற சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான சீ-நகர செயற்திட்டத்தின் காணி மற்றும் கட்டிடம் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அலுமினியக் கட்டைகள் மற்றும் செயிலிங் தாள்கள் கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தப்படாது என்ஈஎம்ஓ இன் பிரதான களஞ்சியங்களிலிருந்தது.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பெறுமதி சேர் வரி, பொருளாதார சேவைக் கட்டணம் மற்றும் தேசத்தைக் கட்டியொழுப்பும் வரி என்பவற்றை உரிய நேரத்தில் செலுத்தாமை காரணமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் ரூபா 114,399,641 மிகைக்கட்டணமொன்று விதிக்கப்பட்டிருந்தது. மேலும், பெறுமதி சேர் வரி, பொருளாதார சேவைக்கட்டணம் மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி போன்றன முறையே ரூபா 628,504,287 மற்றும் ரூபா 67,996,943 மற்றும் ரூபா 15,130,647 தொகைகளானது 2018 இன் இறுதி வரையிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

### 3.6 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ப்படுகின்றன.

(அ) நிரந்தர அடிப்படையில் சிரேஸ்ட முகாமைத்துவ மட்டத்திலுள்ள அதிகமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்களினை மேற்கொள்ளும் பொருட்டு, 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்தினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை, எனினும், உயர் சம்பள அளவிடைகளின் கீழுள்ள சிரேஸ்ட முகாமைத்துவ மட்டத்திலுள்ள 06 பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 35 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மேலும், 60 அத்தியட்சகர்களும் (சிவில்) ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

(ஆ) தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினிலுள்ள பதவியொன்றிற்கு மாத்திரம் நியமனமொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். இருப்பினும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 28 பதவிகளுக்கு 550 மிகை ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) 2006 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய, 28(ii) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2009 நவம்பர் 25 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் டீஎம்எஸ்/ஈ3/43/4/265/1 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி வெற்றிடங்கள் நிரப்பப்படக்கூடாது அல்லது புதிய பதவிகள் உருவாக்கப்படக்கூடாதென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், 05 அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்கு 07 ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதி பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 - 2021 ஆம் காலப்பகுதிக்கு கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் திட்டம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிட்டப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதிலுள்ள தவறுகளின் சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டது. கூட்டிணைந்த திட்டத்தில் உருவாக்கப்பட்ட பின்வரும் இலக்குகள் எதிர்பார்க்கப்பட்டவாறு அடையப்பட்டிருக்கவில்லை.

(அ) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பிரிவினதும் சராசரி அதிகுறைந்த வருடாந்த வருமானத்தை 5 சதவீதத்தினால் முன்னேற்றுவதற்கும் மற்றும் செயற்திட்டங்களிலிருந்து 5 சதவீத வருடாந்த மேலதிக வருமானத்தினை உழைப்பதற்கும்.

(ஆ) கடன்களின் அறவிடுகைக்கான முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு மற்றும் 20 சதவீதத்தினால் தற்போதைய கடன் மட்டத்தினைக் குறைப்பதற்கும்.

(இ) வியாபார செயற்பாடுகளின் பல்வகைப்படுத்தல்களின் கீழ், புதிய வருமானம் உழைக்கும் துறைகளினை இனங்காணல் மற்றும் வியாபார செயற்பாடுகளின் விரிவாக்கல்.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டமொன்றினை கூட்டுத்தாபனம் தயாரித்திருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சில நோக்கங்கள் தந்திரோபாயங்கள் மற்றும் நடவடிக்கைகளை அடைதலிற்கான நேரகாலம் தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் அதனுள் பின்வரும் முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய பிஎவ்டீ/ஆர்ஈடீ/01/04/2014/01 ஆம் இலக்க பொது நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் பின்வரும் முன்னிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(i) வருமானம், செயற்பாட்டுச் செலவினங்கள், அபிவிருத்தி செலவினங்கள், நிதிநிலமைக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று போன்றவற்றை உள்ளடக்கிய வருடாந்த பாதீடு

(ii) முன்மொழியப்பட்டுள்ள பாரிய முதலீடுகள், இயளளவினை கட்டியெழுப்பல் மற்றும் பாரிய பெறுகைகளை உள்ளடக்கிய வருடாந்த பெறுகைத்திட்டம்

(iii) மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டம்

(iv) கடன் மீள்செலுத்துகைத் திட்டம்

(v) உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காண்டின் 15 நாட்களிற்கு முன்னர் வருடாந்த பாதீடு உரிய அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், இது 2018 பெப்ரவரி 08 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாதத்திற்காகவும் பாதீடு தயாரிக்கப்பட்டிருந்த போதும், நிதிப்பற்றாக்குறைக்கான முறைமை காட்டப்பட்டிருக்கவில்லை.

### 4.4 வருடாந்த அறிக்கைகளினை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2019 யூலை 20 வரையிலும் பாராளுமன்றத்தில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் காலத்திற்கு காலம் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதிக்கட்டுப்பாடு | (i) கட்டளைகளுடன் காசோலைகளினூடாக முற்பணங்களினை வழங்கல். |
| | (ii) பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்பட்ட கடன்பட்டோர்களிடமிருந்து நிதியங்கள் அறவிடப்படாமை. |
| | (iii) வாடிக்கையாளர்களுக்கு பற்றுச்சீட்டுக்களினை சமர்ப்பிப்பதில் குறிப்பிடத்தக்களவு தாமதங்கள். |
| | (iv) தீர்ப்பனவு செய்யப்பட்டிராது நீண்டகாலப்பகுதியொன்றுக்கு மேலாக கொள்வனவு முற்பணங்கள் காணப்படுகின்றமை. |
| | (v) நிர்மாணங்களுடன் தொடர்புடைய நீண்டகால பிடிகாசினை தீர்ப்பனவு செய்யத்தவறியமை. |
| (ஆ) வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | (i) தீர்க்கப்படாமல் நீண்டகாலமாக ஆரம்ப முற்பணங்கள் உள்ளமை. |
| | (ii) குறித்த நேரத்தில் வரிகளை செலுத்தாமையால் தவறால் மிகையறவீடுகள் கொடுப்பனவு |
| (இ) ஆளணி நிர்வாகம் | (i) ஏனைய நிறுவகங்களுக்கு மனித வளங்களினை விடுவித்தல் |

| | | |
|---|---|---|
| | | (ii) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து ஊழியர்களினை ஆட்சேர்ப்புச் செய்கின்றமை. |
| | | (iii) ஒப்பந்த அடிப்படையில் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளுக்கு உத்தியோத்தர்களினை ஆட்சேர்ப்புச் செய்கின்றமை. |
| (ஈ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | விளைவற்ற சொத்துக்களினை முறையாகப் பயன்படுத்துவதற்கு மற்றும் காணிகளின் உரிமையினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கத்தவறியமை. |
| (உ) | இருப்புக் கட்டுப்பாடு | அனைத்து தளங்களிலும் வருடாந்த மெய்மையாய்வை நடாத்துவதற்கு தவறியமை. |